சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை: திரு.S.முத்துராமன், B.L.,

சார்பு நீதிபதி மன்னார்குடி

2056 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 22 ம் தேதி

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 196/2021**

CNRNo.TNTV05-000819-2021

T.S. ராஜகோபாலன் ..........வாதி

//எதிர்//

1. மஞ்சுளா (இறந்தார்)

2. சண்முகப்பிரியா
(Amended as per Order in I.A.No.02/2025
Allowed on 03.07.2025) ......... பிரதிவாதிகள்

பிரதான அசல் வழக்கானது கடந்த 04.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S..விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டும், 2-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

இவ்வழக்கு, தாவா சொத்தில் பிரதிவாதி அனுபவித்து வரும் ஆக்கிரமிப்பு/ குடியிருப்பை நீக்கி, வாதிக்கு வசப்பரிகாரம் (Recovery of Possession) வழங்குமாறு கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>வாதியின் வழக்குரை சுருக்கம்</u>:-**

தாவா சொத்து வாதியின் தந்தை டி.பி. சிங்காரவேலு உடையார் பெயரில் சிட்டா, அடங்கல், அ-பதிவேடு ஆகியவற்றில் உள்ளதாகவும், தந்தை 23.02.2002 அன்று இறந்த பின் அவரது சட்ட வாரிசுகளான மனைவி சின்னம்மாள் மற்றும் புதல்வி/புதல்வர்களான வாதி, செண்பகலெட்சுமி, மீனாட்சி, விசாலாட்சி ஆகியோர்களின் கூட்டனுபவத்தில் தாவா சொத்தை அனுபவித்து வந்ததாகவும், தாய் சின்னம்மாள் 25.11.2012 அன்று இறந்த பின் வாதியும் அவரது சகோதரிகளும் கூட்டனுபவத்தில் இருந்து வருவதாகவும் வாதி கூறுகிறார். பிரதிவாதியின் மாமனார் வாதியின் தந்தையிடம் வாய்மொழி அனுமதி பெற்று தாவா சொத்தில் குடியிருந்ததாகவும், அந்த அனுமதி ரத்து செய்யப்பட்ட பின்னரும் பிரதிவாதி வெளியேறாததால் 30.09.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், ஒரு பாகஸ்தர் மற்ற பாகஸ்தர்களின் நலனுக்காக தனியே வழக்கு தாக்கல் செய்யலாம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வாதி தனியே இவ்வழக்கை தாக்கல் செய்ததாகவும் தெரிவிக்கிறார்.

2. **<u>பிரதிவாதியின் எதிர்வழக்குரை சுருக்கம்</u>:-**

வாதியின் வழக்குரையில் கூறப்பட்ட உண்மைகள் மறுக்கப்படுகின்றன. தாவா சொத்து பிரதிவாதியின் மாமனார் குடும்பத்திற்கும் வாதியின் தந்தை குடும்பத்திற்கும் இடையே 1940/1942-ல் நடந்த பரிவர்த்தனை (Exchange) மூலம் பிரதிவாதியின் மாமனாருக்கு கிடைத்ததாகவும், அதன் பின் தலைமுறை தலைமுறையாக பிரதிவாதியின் கணவர் வழியாக பிரதிவாதி வரை தடையின்றி அனுபவிக்கப்பட்டு வருவதாகவும், எனவே தமக்கு எதிரிடை பாத்தியம் (Adverse Possession/Prescriptive Title) சித்தித்துவிட்டதாகவும் பிரதிவாதி தெரிவிக்கிறார். வாதி வழக்குரையில் வாதியின் தந்தைக்கும் வாதிக்கும் இடையே 28.10.1959 அன்று நடந்த பாகப்பிரிவினையை (Ex.A11) மறைத்துள்ளதாகவும், அது சட்ட முரணான உண்மை மறைப்பு (Suppression of Material Facts) என்றும், சகோதரிகளையும் சிங்காரவேலு உடையாரின் சட்ட வாரிசுகளையும் தரப்பினராக சேர்க்காதது Non-joinder of Necessary Parties எனும் குறைபாட்டால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தால்

பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிவாதி தெரிவித்து வாதியின் வழக்கு தள்ளுபடி செய்ய்ப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

**3.** வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை இரண்டையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட எழுவினாக்கள்:

1. Whether the plaintiff is entitled to the relief of Recovery of Possession as prayed for?

2. Whether the suit is barred by non-joinder of necessary parties (i.e.) legal heirs of deceased Singaravelu Udaiyar?

3. Whether the suit is filed by the plaintiff on the basis of suppression of material fact?

4. Whether it is true as said by the defendant that the cause of action is imaginary one?

5. Whether it is true as said by the defendant that the suit property was got by her father-in-law through exchange from the parent of the plaintiff?

6. To what other relief the plaintiff is entitled?

**4.** வாதி தன்னை வாசா.1 ஆக விசாரித்து வாசா.ஆ,1 முதல் வாசா.ஆ.11 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை; யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின்போது தாவா சொத்து வாதியின் தந்தை டி.பி. சிங்காரவேலு உடையார் பெயரில் சிட்டா, அடங்கல், அ-பதிவேடு ஆகியவற்றில் உள்ளதாகவும், தந்தை 23.02.2002 அன்று இறந்த பின் அவரது சட்ட வாரிசுகளான மனைவி சின்னம்மாள் மற்றும் புதல்வி/புதல்வர்களான வாதி, செண்பகலெட்சுமி, மீனாட்சி, விசாலாட்சி ஆகியோர் கூட்டனுபவத்தில் தாவா சொத்தை அனுபவித்து வந்ததாகவும், தாய் சின்னம்மாள் 25.11.2012 அன்று இறந்த பின் வாதியும் அவரது சகோதரிகளும் கூட்டனுபவத்தில் இருந்து வருவதாகவும் வாதி கூறுகிறார். பிரதிவாதியின் மாமனார் வாதியின் தந்தையிடம் வாய்மொழி அனுமதி பெற்று தாவா சொத்தில் குடியிருந்ததாகவும், அந்த அனுமதி ரத்து செய்யப்பட்ட பின்னரும் பிரதிவாதி

வெளியேறாததால் 30.09.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், ஒரு பாகஸ்தர் மற்ற பாகஸ்தர்களின் நலனுக்காக தனியே வழக்கு தாக்கல் செய்யலாம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வாதி தனியே இவ்வழக்கை தாக்கல் செய்ததாகவும் தெரிவித்து வாதுரை செய்தார்.

**5.1)** அதேசமயம் 2 ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின்போது வாதியின் வழக்குரையில் கூறப்பட்ட உண்மைகள் மறுக்கப்படுகின்றன. தாவா சொத்து பிரதிவாதியின் மாமனார் குடும்பத்திற்கும் வாதியின் தந்தை குடும்பத்திற்கும் இடையே 1940/1942-ல் நடந்த பரிவர்த்தனை (Exchange) மூலம் பிரதிவாதியின் மாமனாருக்கு கிடைத்ததாகவும், அதன் பின் தலைமுறை தலைமுறையாக பிரதிவாதியின் கணவர் வழியாக பிரதிவாதி வரை தடையின்றி அனுபவிக்கப்பட்டு வருவதாகவும், எனவே தமக்கு எதிரிடை பாத்தியம் (Adverse Possession/Prescriptive Title) சித்தித்துவிட்டதாகவும் பிரதிவாதி தெரிவிக்கிறார். வாதி வழக்குரையில் வாதியின் தந்தைக்கும் வாதிக்கும் இடையே 28.10.1959 அன்று நடந்த பாகப்பிரிவினையை (Ex.A11) மறைத்துள்ளதாகவும், அது சட்ட முரணான உண்மை மறைப்பு (Suppression of Material Facts) என்றும், சகோதரிகளையும் சிங்காரவேலு உடையாரின் சட்ட வாரிசுகளையும் தரப்பினராக சேர்க்காதது Non-joinder of Necessary Parties எனும் குறைபாட்டால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிவாதி வாதுரை செய்தார்.

**6. <u>எழுவினாக்கள் 5, 3 மற்றும் 4:-</u>**

பிரதிவாதி தமது எதிர்வழக்குரையில் தாவா சொத்து தமது மாமனாருக்கு 1940/1942-ல் பரிவர்த்தனை மூலம் கிடைத்ததாகவும், அதன் அடிப்படையில் எதிரிடை பாத்தியம் சித்தித்துவிட்டதாகவும் குறிப்பிட்ட தேதி/ஆவணம் இன்றி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார். பொதுவாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும் 103-ன் படி, ஒரு தரப்பினர் ஒரு உண்மையை உறுதிப்படுத்த விரும்பினால் அதை நிரூபிக்கும் பொறுப்பு அவர்மீதே உள்ளது. எதிரிடை பாத்தியம் தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றம்

Karnataka Board of Wakf vs. Government of India, (2004) 10 SCC 779 என்ற வழக்கில், அத்தகைய பாத்தியம் பலவந்தமின்றி, மறைவின்றி, அனுமதியின்றி என்ற தன்மையில், தொடர்ச்சியாக, வெளிப்படையாக, விரோதமாக, குறிப்பிட்ட காலத்திற்கு (12 ஆண்டுகள்) நிரூபிக்கப்பட வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளது. T.Anjanappa vs. Somalingappa, (2006) 7 SCC 570 என்ற வழக்கிலும், எதிரிடை பாத்தியம் தொடங்கிய திட்டவட்டமான தேதி பிரதிவாதியால் குறிப்பிட்டு நிரூபிக்கப்பட வேண்டும் என உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. P. Lakshmi Reddy vs. L.Lakshmi Reddy, AIR 1957 SC 314 என்ற வழக்கிலும் இதே கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது.

**7.** இந்த வழக்கில் பிரதிவாதி பரிவர்த்தனை நடந்ததாகக் கூறும் தேதி, ஆவணம், சாட்சிகள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை; தன்னையோ வேறு எவரையோ சாட்சியாக விசாரிக்கவும் இல்லை; எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவும் இல்லை. எனவே பிரதிவாதி கூறும் பரிவர்த்தனை/எதிரிடை பாத்தியம் என்பது வெறும் வாதமாகவே நிற்கிறதே தவிர, சட்டப்படி நிரூபிக்கப்பட்ட உண்மையாக ஏற்க இயலாது. இதன் அடிப்படையில் எழுவினா எண்.5 பிரதிவாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது. எனினும், இதே அளவீட்டில் வாதியின் வழக்குரையும் ஆராயப்பட வேண்டும். வாதி தாக்கல் செய்த வாசா.ஆ.11 சிங்காரவேலு உடையார் மற்றும் வாதிக்கு இடையே 28.10.1959 அன்று பதிவான பாகப்பிரிவினை பத்திரம் "B" அட்டவணை சொத்துக்கள் வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதைக் காட்டுகிறது. இந்த முக்கிய ஆவணத்தை வாதி தமது வழக்குரையில் எங்கும் குறிப்பிடவே இல்லை. மேலும், குறுக்கு விசாரணையின்போது வாதியே "ஏ" அட்டவணை சொத்து வாசா.ஆ 1 முதல் வா.சா.ஆ.3 இன்னும் சிங்காரவேலு உடையார் பெயரிலேயே இருப்பது காட்டுகிறது சிங்காரவேலுவுக்கு ஒதுக்கப்பட்டதாக ஒப்புக்கொண்டுள்ளார். 1959-ம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்கனவே நடந்திருந்தபோதும், அதை மறைத்து தாவா சொத்தை 'கூட்டு குடும்ப சொத்து, கூட்டனுபவத்தில் உள்ளது' என வழக்குரையில் கூறியது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் S.P. Chengalvaraya Naidu v. Jagannath, (1994) 1 SCC 1 என்ற வழக்கில் விளக்கிய கோட்பாட்டின்படி – நீதிமன்றத்தில் இருந்து முக்கிய உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்வது

நீதிமன்றத்தின் மீதான மோசடி எனவும், அத்தகைய தரப்பினர் யாதொரு நிவாரணத்திற்கும் தகுதியற்றவர் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

8. மேலும், குறுக்கு விசாரணையில் வாதி, தமது தந்தை பிரதிவாதிக்கு அளித்த வாய்மொழி அனுமதியை 2003-ம் ஆண்டிலேயே வாய்மொழியாக ரத்து செய்ததாகவும், ஆனால் வழக்குரையில் அந்த ரத்து 30.09.2021 வழக்கறிஞர் அறிவிப்பின் மூலமே நடந்ததாகவும் முரண்பட்ட வாக்குமூலம் அளித்துள்ளார். தமது சகோதரிகளின் அனுமதி பெற்று வழக்கு தாக்கல் செய்ததாக வழக்குரையில் கூறாதது, 1-ம் பிரதிவாதி இறந்த பின் 2-ம் பிரதிவாதியை கட்சி சேர்த்தபோதும் அவருக்கு எதிராக குறிப்பிட்ட பரிகாரம் கோராதது ஆகியவையும் வழக்குரையின் நம்பகத்தன்மையை பாதிக்கின்றன. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Vidhyadhar vs. Manikrao, (1999) 3 SCC 573 என்ற வழக்கில், ஒரு தரப்பினரின் குறுக்கு விசாரண ஒப்புதல் அவருக்கு எதிரான சிறந்த ஆதாரம் (best evidence against him) என தெளிவுபடுத்தியுள்ளது. இந்த ஒப்புதல்களின் அடிப்படையில், வாதியின் வழக்குரையில் கூறப்பட்ட வாய்மொழி அனுமதி/ரத்து குறித்த காரண காரியம் (cause of action) நம்பகத்தன்மையற்றது என்றே கொள்ள வேண்டியுள்ளது. எனவே எழுவினாக்கள் 3 மற்றும் 4 வாதிக்கு எதிராகவும் தீர்மானிக்கப்படுகின்றன.

9. <u>எழுவினா -. 2 :-</u>

பிரதிவாதி, சிங்காரவேலு உடையாரின் சட்ட வாரிசுகளான வாதியின் சகோதரிகளை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு குறைபாடு உடையது என வாதிடுகிறார். ஆயினும், தாவா சொத்து ஒரு பாகஸ்தரால் அந்நியருக்கு (Stranger/Trespasser) எதிராக வசப்பரிகாரம் கோரப்படும் வழக்கில், மற்ற பாகஸ்தர்களை தரப்பினராக சேர்க்காதது வழக்கை பாதிக்காது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக் கோட்பாடாகும். மாண்புமிகு உச்சநீதிமன்றம் Sri Ram Pasricha v. Jagannath Prasad Bhagat, (1976) 4 SCC 184 என்ற வழக்கில், ஒரு பாகஸ்தருக்கு தாவா சொத்தின் மொத்தத்திலும் நலன் இருப்பதால், மற்ற பாகஸ்தர்களை தரப்பினராக சேர்க்காமலேயே அவர் தனியே வழக்கு நடத்தலாம் என தீர்ப்பளித்துள்ளது. Dwarka Prasad Agarwal v. Ramesh Chander Agarwal, (2003) 6 SCC

220 என்ற வழக்கிலும் இதே கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒரு பாகஸ்தர் பெறும் வசப்பரிகார தீர்ப்பு, மற்ற அனைத்து பாகஸ்தர்களுக்கும் நலன் சேர்க்குமே தவிர, பாகப்பிரிவினை வழக்கு அல்லாத இவ்வழக்கில் அனைவரும் இணைந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, எழுவினா எண்.2 வாதிக்கு சாதகமாக அதாவது வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற குறைபாட்டால் பாதிக்கப்படவில்லை என தீர்மானிக்கப்படுகிறது.

10. <u>எழுவினாக்கள் எண்- 1 மற்றும் 6 :-</u>

வாதி வேண்டிய வசப்பரிகாரம் அவருக்கு கிடைக்குமா என்பதும் வேறு பரிகாரங்கள் என்ன என்பதும் இந்த எழுவினாக்களுக்கு விடைகாண வேண்டியுள்ளது.

இது ஒரு தலைப்புரிமையின் (title) அடிப்படையில் கோரப்படும் வசப்பரிகார வழக்கு என்பதால், வெறும் தடையாணை வழக்கை போலன்றி, வாதி தமது சொந்த தலைப்புரிமையையும் உரிமையையும் உறுதியாக, தொடர்ச்சியான, நம்பகமான ஆதாரங்கள் மூலம் நிரூபிக்க வேண்டிய கடமையுடையவர். மாண்புமிகு உச்சநீதிமன்றம் Anathula Sudhakar v. P. Buchi Reddy, (2008) 4 SCC 594 என்ற வழக்கில் விளக்கியது போல், தலைப்புரிமை நேரடியாக தீர்மானிக்கப்பட வேண்டிய வழக்குகளில், நீதிமன்றம் தலைப்புரிமையை உறுதியாக நிரூபிக்கும் ஆதாரங்களை கண்டிப்புடன் கோர வேண்டும்; இது வெறும் தடையாணை வழக்குகளில் காட்டப்படும் தளர்வான அணுகுமுறையிலிருந்து வேறுபட்டது. அந்த கோட்பாட்டின்படி பார்க்கும்போது, வாதியின் சொந்த ஆவணமான வாசா.ஆ.11-ல் தெரியவரும் 1959 பாகப்பிரிவினையையும், அதனை மறைத்து வழக்குரை தாக்கல் செய்ததையும், குறுக்கு விசாரணையில் வெளிப்பட்ட முரண்பாடுகளையும் கருத்தில் கொள்ளும்போது, வாதியின் தலைப்புரிமை மற்றும் அதனடிப்படையிலான வசப்பரிகார உரிமை உறுதியாக நிரூபிக்கப்படவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது.

**11.** மேலும் காலாவதி தொடர்பாக வாதியே குறுக்கு விசாரணையில், தமது தந்தை பிரதிவாதியின் மாமனாருக்கு அளித்த வாய்மொழி அனுமதியை 2003-ம் ஆண்டிலேயே

வாய்மொழியாக ரத்து செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். இது உண்மையெனில், அன்றைய தேதியிலிருந்தே பிரதிவாதியின் தொடர் குடியிருப்பு அனுமதிக்கு புறம்பானதாக (unlawful) மாறியிருக்க வேண்டும். வரம்புச் சட்டம் 1963-ன் Article 65-ன் படி, தலைப்புரிமை அடிப்படையிலான வசப்பரிகார வழக்கு, பிரதிவாதியின் அனுபவம் வாதிக்கு எதிராக விரோதமான தன்மை பெற்ற நாளிலிருந்து 12 ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்யப்பட்டாக வேண்டும். 2003-ல் அனுமதி ரத்தானது என்ற வாதியின் சொந்த வாக்குமூலத்தையே அடிப்படையாக கொண்டால், 12 ஆண்டு காலவரம்பு 2015-ல் முடிவடைந்திருக்கும்; ஆனால் இவ்வழக்கு 2021-ல், அதாவது 18 ஆண்டுகள் கழித்தே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த தாமதத்திற்கு வழக்குரையில் எவ்வித விளக்கமும் (வரம்புச் சட்டப்படியான Exclusion/Extension கோரிக்கையும்) அளிக்கப்படவில்லை. எனவே, வாதியின் சொந்த சாட்சியத்தின் அடிப்படையிலேயே, இவ்வழக்கு வரம்புச் சட்டத்தின் Article 65-ன் கீழ் காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**12.** பிரதிவாதி தமது எதிர்வழக்குரையில் கூறிய பரிவர்த்தனை/எதிரிடை பாத்தியம் மேலே கண்டவாறு நிரூபிக்கப்படவில்லை என்பது உண்மைதான். எனினும், சட்டத்தின் நிலைநிறுத்தப்பட்ட கோட்பாடான 'வாதி தமது சொந்த வழக்கின் வலிமையின் அடிப்படையிலேயே வெற்றி பெற வேண்டும்; பிரதிவாதியின் வழக்கின் பலவீனத்தின் அடிப்படையில் அல்ல' (Plaintiff must succeed on the strength of his own case and not on the weakness of the defendant's case) – இது Union of India v. Vasavi Co-operative Housing Society Ltd., (2014) 2 SCC 269 உள்பட பல உச்சநீதிமன்ற தீர்ப்புகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ள கோட்பாடாகும் – இதன்படி, பிரதிவாதியின் வழக்கு நிரூபிக்கப்படாமல் போனாலும், வாதியின் சொந்த வழக்கே உண்மை மறைப்பு, முரண்பட்ட சாட்சியம் மற்றும் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வாதிக்கு வசப்பரிகாரம் வழங்க இயலாது. எனவே, எழுவினா 1 ஆனது வாதிக்கு எதிராகவும், எழுவினா 6-ன் படி வாதி வேறு எந்த பரிகாரத்திற்கும் தகுதியற்றவர் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

**13.** இறுதியாக,

1) வாதியின் வழக்கு முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டும் அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் நாள் என்னால் இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN Date: 2026.08.07 18:09:46 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.

**<u>பின் இணைப்பு :-</u>**

**1. <u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி :-</u>**

வா.சா.1 ராஜகோபாலன்

**2. <u>வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.12.2021 | தலைமையிடத்து துணைவட்டாட்சியர் வழங்கிய "அ" பதிவேடு - உண்மை நகல் |
| வா.சா.ஆ.2 | 14.12.2021 | தலைமையிடத்து துணைவட்டாட்சியர் வழங்கிய சிட்டா - உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 14.12.2021 | தலைமையிடத்து துணைவட்டாட்சியர் வழங்கிய அடங்கல் - உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | 15.12.2021 | வீட்டுவரி இரசீது - அசல் |
| வா.சா.ஆ.5 | 25.11.2012 | சின்னம்மாள் இறப்பு சான்றிதழ் - அசல் |
| வா.சா.ஆ.6 | 23.02.2002 | சிங்காரவேலு உடையார் இறப்பு சான்றிதழ் - அசல் |
| வா.சா.ஆ.7 | 25.04.2012 | சிங்காரவேலு உடையார் வாரிசு சான்றிதழ் - அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | 30.09.2021 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.9 | ---- | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை - அசல் |
| வா.சா.ஆ.10 | --- | Guide Line Value - கணினி நகல் |
| வா.சா.ஆ.11 | 28.10.1959 | பாகப்பிரிவினை பத்திரம் ஆவண எண்.2053/1959 - சான்றிட்ட நகல் |

3. **பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN
Date: 2026.08.07 18:09:55 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.